வெளியீடு எண் 81.

திருமயேந்திரப்பள்ளித் திருப்பதிகம்

தருமபுர ஆதீனம்.

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 25-வது மகாசந்நிதானம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்** திருப்பதிகம் பெற்ற 274 சிவதலங்களிலும் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை செய்யவும், அந்தந்தத் தலத்திருப்பதிகங்களைத் தனித்தனியே சிறுசிறு நூலாக அச்சிட்டு ஆராதனைகாலத்து வழங்கவும் திருவுள்ளங்கொண்டு ஆணையருளியவாறு இந்நூல் வெளியிடப் பெற்றது.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 81

உ
குருபாதம்
திருச்சிற்றம்பலம்

திருமயேந்திரப்பள்ளித் திருப்பதிகம்

இது
திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
ஆக்ஞைப்படி
வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்
1945

முதற்பதிப்பு
பிரதிகள் 500

தருமபுர ஆதீனம்
ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

உ

சிவமயம்

முன்னுரை

இந்நில வுலகம் மிகப் பெரியது. அதில் காணப்படும் யோனிபேதங்களோ எழுவகைத் தோற்றத்தோடு கூடிய எண்பத்துநான்கு லக்ஷம் எனச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளிலே ஆன்மாக்கள் தாம் தாம் செய்யும் வினைப்பயனாலே பிறந்து இறந்து உழல்கின்றன. அவ்வாறு உழல்கின்ற ஆன்மாக்கள் பிறவிப் பெருங்கடலினின்றும் கரையேறி, பிறவா இன்பப் பெருநெறி அடைந்து பேரின்ப முறுதற்பொருட்டு கருணைக் கடலாகிய இறைவன் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று வடிவங்களாக விளங்குகின்றான் என்று பெருநூல்கள் பகர்கின்றன.

"ஈண்டுநாற் பிறப்பின் எழுவகைத் தோற்றத்
தெண்பத்து நான்கெனும் இலக்கம்

மாண்டபல் பவத்திற் பன்முறை வினையான்
மறிதரும் உயிர்களை எடுப்ப
ஆண்டருள் அமலன் அனுதியில் உலகம்
ஆக்குழி அருந்தலந் தீர்த்தம்
காண்டகு மூர்த்தி யென்னமூன் றுருவாய்க்
கண்ணகன் உலகெலாம் கதித்து''

என்பது தணிகைப் புராணப்பாடல். ஆகவே இம்மூன்றினையும் சிவபெருமானுகவே கருத வேண்டும். கருதுவதோடு மனம் வாக்குக் காயம் ஆகிய மூன்றனுலும் வழிபடவேண்டும். வழிபட்டால் ''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாத் தொடங்கினர்க்கோர், வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும்'' என்று ஆன்ருேர் அருளிச்செய்தவாறு ஞானுசாரியர் கிடைக்கப்பெற்று, அவரால்உண்மை ஞானம் கைவரப் பெற்று முடிவில்லா இன்பம் எய்தப் பெறுவர்.

இறைவன் வடிவங்களாகிய இம்மூன்றனுள் ஒன்ருகிய தலங்களைக் கணக்கிடப்

புகின் அவைகள் அளவிறந்தன, அவைகள் ஒவ்வொன்றிலும் சிவலிங்காதி திருமேனிகள் கொண்டு பெருமான் எழுந்தருளியிருந்து, தன்னைத் தொடுத்த மலரொடு தூபமுஞ் சாந்துங்கொண்டு மெய்யன்போடு வழிபடு வார்கட்கு அருள்பாலிக்கும் இடங்களாகிய ஆலயங்கள் விளங்குகின்றன. அவைகளெல் லாம் ஒவ்வொரு காலங்களில் இறைவன் அடியவர் பொருட்டு காட்சியளிக்குங்கால் அவர்கள் கண்டுகளித்து, "யாம்பெற்ற இன் பம் பெறுக இவ்வையகம்" என்ற வாக்கி யத்தை உட்கொண்டு "பெருமானே! தேவரீர் இவ்விடத்தில் எப்பொழுதும் யாவருக்கும் காட்சிதந்து அருள்பாலிக்கவேண்டும்" என்று விண்ணப்பிக்க, வேண்டுவார் வேண்டுவதே ஈயும், கருணைவள்ளலாகிய இறைவன் அடிய வர்கள் விருப்பின்படி எழுந்தருளியிருக்கும் இடங்களாகும். இத்தகைய இடங்களாகிய திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனிதன்னைச் சிவனெனக்கண்டு வழிபடுவார்களுக்குப் பெரு

மான் சுரபிக்கு எங்கும் உருக்காண ஒண்ணாத பால் முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல் அத் திருமேனியில் வெளிப்பட்டு நின்று அருள் செய்வன்.

இத்தகைய சிறப்புவாய்ந்த சிவதலங்கள் பலவற்றினுள் உமையம்மையார், சிவனது திருக்குமாரர்கள், திருமால், பிரமன், இந்திரன், ஏனைய தேவர்கள், கலைமகள் பூமகள் முதலியோர், முனிகணங்கள் ஆகிய பலரும் வழிபட்டுப் பேறுபெற்றதோடு, நீர்வாழ்வன, ஊர்வன; பறப்பனவாகிய விலங்குகளும் வழிபட்டு முத்திபெற்றன என்பதைத் திருமுறைகளில் பல இடங்களிலும் கண்டு இன்புறலாம். உதாரணமாக ஒரு திருப்பாடல் இங்கு தரப்பட்டிருக்கின்றது,

இயக்கர் கின்னரர் யமனொடு வருணர்
　இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்க மில்புலி வானர நாகம்
　வசுக்கள் வானவர் தானவ ரெல்லாய

அயர்ப்பொன் றின்றிநின் றிருவடி யதனை
அர்ச்சித் தார்பெறு மாரருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே.

என்பது சுந்தரமூர்த்திகள் திருவாக்கு. இத் தலப்பதிகம் ஆறும் திருப்பாடலிலும் காணலாம்.

ஆகவே பெறுதற்கரிய பிறவியாகிய மானுடப் பிறவிபெற்ற ஒவ்வொருவரும் தலங்கடோறும் சென்று மனம் வாக்குக் காயங்களினுல் அரன் பணிசெய்யவேண்டும். வாழ்த்த வாயும், நினைக்க நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைத் சூழ்த்தமாமலர் கொடுதூவித் துதிக்கவேண்டும். ஈதன்றே பிறவி பெற்றதன் பயன்.

தலயாத்திரை செய்யும் அன்பர்கள் தலங்களுக்குச் சென்றவுடன் சைவசமயாசாரியர்கள் என்று சிறப்பித்துச் சொல்லப்படும்

திருஞானசம்பந்த சுவாமிகள் முதலியோர் களால் திருவாய்மலர்ந்தருளப் பெற்ற திருப் பதிகங்கள் இத்தலத்திற்கு உண்டா? உண் டாயின் யார் யார் எத்துணைப் பதிகங்கள் அருளியிருக்கின்றார்கள் இது போன்றபாடல் பெற்ற தலங்கள் இன்னும் எத்துணையிருக் கின்றன. என்று அறிய விரும்புவார்களல்லவா?

காலமறிந்து, இடமறிந்து, சமயப்பணி செய்தலையே குறிக்கோளாகக் கொண்டு தருமபுர ஆதீனத்தில் 25-வது குருமகாசந்நி தானமாக வீற்றிருந்து அருட்செங்கோல் செலுத்தும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்** அவ்விருப்பத்தினை நிறைவேற்றத் திருவுளங் கொண்டார்கள். தலப்பதிக அட்டவணை தயார்செய்வித்து அச்சிட்ட அவைகளை ஒவ் வொரு தலங்களுக்கும் அனுப்பச் செய்திருக் கின்றார்கள். அதுமாத்திரமல்லாமல் அந்தந்

தத் தலங்களிலும் ஆதீனச் சார்பில் பெருமா னுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை செய்விக் கின்றார்கள்; அந்தந்தத் தலத்துக்குரிய திருப் பதிகங்களையும் தனித்தனியே சிறு புத்தகமாக அச்சிடுவித்து ஆராதனை காலத்தில் திருமுறை வல்லார்களைக்கொண்டு பதிகங்களை ஓதச் செய்து அந்நூலையும் வழங்கச் செய்கின்றார் கள். அம்முறையிலே **திருமயேந்திரப்பள்ளித் திருப்பதிகம்** என்னும் இந்நூல் வெளிவந் துள்ளது. இத் தலத்திற்குக் கோயிலடிப் பாளையம் என்ற திருப்பெயரும் உண்டு. இறைவர் திருநாமம் **திருமேனியழகர்**. அம்மை யார் திருநாமம் **வடிவாம்பிகை**. திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகம் ஒன்று இத்தலத்திற்கு உள்ளது. அன்பர்கள் நாடோறும் பாராயணம் செய்து ஸ்ரீ திருமேனியழகர் திருவருளைப்பெற்று நீடு வாழ்வார்களாக.

பதிகத்தில் காணப்படும் குறிப்புக்கள்

ஊர்:- மேகத்தைத் தொடும்படியாக உயர்ந்திருக்கின்ற கோபுரங்களையும், அழகிய மாடமாளிகைகளையும் கொண்டு விளங்கும்; சோலைகள் அழகு செய்யும்; முத்துக்கள் கூட்டம் கூட்டமாக மலர்க்குவியல்போல் கடல் அலைகளால் குவிக்கப்பட்டு விளங்கும்; அலைகளால் அடித்துக்கொண்டுவரப்படும் பவளமும் வயிரமும் அகிலும் வளையினுள் புகும்; கடலில் தூரத்திலே கப்பல் வருகின்றதைக் குறித்து சங்கு ஒலிக்கப்பெறும்.

சோலை:- கண்டலும், தாழையும், தாமரைத் தடாகமும் பொருந்தி விளங்கும்; மரவமரங்கள் நிறைந்திருக்கும்; ஆகாயத்தைத் தொடும்படியாக உயர்ந்திருக்கும்; வண்டுகள் உலாவும்; மணம் வீசும்.

வயல்:- கோங்கமரம், வேங்கைமரம், மலர் நிறைந்த புன்னைமரம், தேன்நிறைந்த

கொன்றைமரம், குரவமரம் ஆகியவைகளைப் பக்கத்தேகொண்டு விளங்கும்; மடைகள் நிறைந்திருக்கும்.

தலச்சிறப்பு:- சந்திரன், சூரியன், பிரமன், இந்திரன் ஆகியோர்கள் பெருமானை வழிபட்டுள்ளார்கள். சடைமுடி முனிவர்கள் அன்போடு வழிபட, பெருமான் உகந்து நடனஞ் செய்து அருள்பாலித்தனர்.

இப்பதிகத்தை நாவினால் நவில்பவர் தேவர்கள் எதிர்கொண்டழைக்க உயர்பதியடைவார்கள்.

சிவமயம்

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்.

திரைதரு பவளமுஞ் சீர்திகழ் வயிரமுங்
கரைதரு மகிலொடு கனவளை புகுதரும்
வரைவிலா லெயிலெய்த மயேந்திரப் பள்ளியுள்
அரவரை யழகனை யடியிணை பணிமினே. 1

கொண்டல்சேர் கோபுரங் கோலமார் மாளிகை
கண்டலுங் கைதையுங் கமலமார் வாவியும்
வண்டுலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியிற்
செண்டுசேர் விடையினன் றிருந்தடி பணிமினே. 2

கோங்கிள வேங்கையுங் கொழுமலர்ப் புன்னையுந்
தாங்குதேன் கொன்றையுந் தகுமலர்க் குரவமு
மாங்கரும் பும்வயன் மயேந்திரப் பள்ளியுள்
ஆங்கிருந் தவன்கழ லடியிணை பணிமினே. 3

வங்கமார் சேணுயர் வருகுறி யான்மிகு
சங்கமா ரொலியகி றருபுகை கமழ்தரு
மங்கையோர் பங்கினன் மயேந்திரப் பள்ளியுள்
எங்கணா யகன்றன திணையடி பணிமினே 4

நித்திலத் தொகைபல நிரைதரு மலரெனச்
சித்திரப் புணரிசேர்த் திடத்திகழ்ந் திருந்தவன்
மைத்திகழ் கண்டனன் மயேந்திரப் பள்ளியுட்
கைத்தல மழுவனைக் கண்டடி பணிமினே. 5

சந்திரன் கதிரவன் றகுபுக ழயனொடும்
இந்திரன் வழிபட விருந்தவெம் மிறையவன்
மந்திர மறைவளர் மயேந்திரப் பள்ளியுள்
அந்தமி லழகனை யடிபணிந் துய்ம்மினே. 6

சடைமுடி முனிவர்கள் சமைவொடும் வழிபட
நடநவில் புரிவின னறவணி மலரொடு
படர்சடை மதியினன் மயேந்திரப் பள்ளியுள்
அடல்விடை யுடையவ னடிபணிந் துய்ம்மினே. 7

சிரமொரு பதுமுடைச் செருவலி யரக்கனைக்
கரமிரு பதுமிறக் கனவரை யடர்த்தவன்
மரவமர் பூம்பொழின் மயேந்திரப் பள்ளியுள்
அரவமர் சடையனை யடிபணிந் துய்ம்மினே. 8

நாகணைத் துயில்பவ னலமிகு மலரவன்
ஆகணைந் தவர்கழ லணையவும் பெறுகிலர்
மாகணைந் தலர்பொழின் மயேந்திரப் பள்ளியுள்
யோகணைந் தவன்கழ லுணர்ந்திருந் துய்ம்மினே. 9

உடைதுறந் தவர்களு முடைதுவ ருடையரும்
படுபழி யுடையவர் பகர்வன விடுமினீர்
மடைவளர் வயலணி மயேந்திரப் பள்ளியுள்
இடமுடை யீசனை யிணையடி பணிமினே. 10

வம்புலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியுள்
நம்பனூர் கழலடி ஞானசம் பந்தன்சொல்
நம்பர மிதுவென நாவினு னவில்பவர்
உம்பரா ரெதிர்கொள வுயர்பதி யணைவரே. 11

திருச்சிற்றம்பலம்